செ.வெ. எண்: 12 நாள்: 05.01.2012

# பத்திரிக்கை செய்தி

## இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்காக 2– ஆம் தவணை போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் – 8–1–2012 (ஞாயிறு)

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் பல்ஸ் போலியோ முகாம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதால் போலியோ நோய் இல்லாத நிலை உருவாகி உள்ளது. இருந்த போதிலும், வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வேலை தேடி வருவோர் குழந்தைகள் மூலம் போலியோ வைரஸ் நோய் பரவும் அபாயம் உள்ளது. இவ்வாறு அடிக்கடி இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்கு சரியான தவணைகளில் தடுப்பு மருந்து கிடைப்பதில்லை.

சென்ற மாதம் 11–12–2011 அன்று இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்கு போலியோ நோய்க்கு எதிரான தடுப்பு சக்தியை உருவாக்குவதற்காக சிறப்பு போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்தப்பட்டது. இந்த போலியோ சிறப்பு முகாமில் அரசுத்துறையை சார்ந்தவர்கள் மட்டுமில்லாமல் தன்னார்வ தொண்டு நிறுவனம் மற்றும் ரோட்டரி இன்டர்நேஷனலை சார்ந்தவர்களும் சேர்ந்து பணியாற்றினார்கள். இந்த முகாம் வாயிலாக 31,000 குழந்தைகள் பயன் அடைந்தனர்.

8–1–2012 அன்று இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்காக 2ஆம் தவணை போலியோ சொட்டு மருந்து அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டங்களிலும் இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்கான பட்டியலில் புதிதாக வந்தவர்களும் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

8–1–2012 (ஞாயிறு) அன்று நடைபெறும் முகாம் வாயிலாக ஏறக்குறைய 32,000 இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து
துறை இயக்குநருக்காக, சென்னை–6.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**